II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No. 522 /2022**

Deposition of witness for the Defendant/DW 1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 09.04.2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Ravi | Age | : | |
| Father's / Husband's Name | : | | Village | : | |
| Taluk | : | | Distict | : | |

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

வாதி, நான் மற்றும் வா.சா.2 ஆகியோர் ஒரே நிறுவனத்தில் ஒரே பிரிவில் வேலை பார்க்கிறோம் என்றால் சரிதான். இந்த வழக்கு 17.02.2021 தேதியிட்ட கடன் பத்திரத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரிதான். நான் எனது எதிர்வழக்குரையில் வாதியிடம் இருந்து 27.02.2015 அன்று ரூ. 3 லட்சம் கடன் வாங்கியதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த தொகைக்கு மாதம் 100 க்கு ரூ.5 வீதம் வட்டி செலுத்தியதாகவும் சொல்லியுள்ளேன்என்றால் சரிதான். அதற்கு ஆவணம் எதனையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதி 2022 ல் என் மீது ஒரு புகாரை கொடுத்தார் என்றால் சரிதான். அதன் அடிப்படையல் 15.02.2022 அன்று ரூ.50,000/–மும், 09.03.2022 அன்று ரூ.50,000/–மும் 11.04.2022 அன்று ரூ.50,000/– மும் ஆக மொத்தம் ரூ.1,50,000/– யை வாதிக்கு செலுத்தினேன் என்றால் வங்கி மூலமாக செலுத்தினேன். வா.சா.2 தனது சாட்சியத்தில் நான் எங்கள் நிறுவனத்தில் பலரிடமும் கடன் பெற்றுள்ளதாக சொல்லியுள்ளதை பொருத்து அவரை குறுக்கு விசாரணை செய்யவில்லை என்றால் நான் யாரிடமும் கடன்

வாங்கவில்லை. நான் வாதியிடம் இருந்து 18.05.2017 அன்று ரூ 2 லட்சமும் மற்றும் 08.02.2018 அன்று ரூ.2 லட்சமும் கடனாக பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. அதற்காக தான் ரூ. 7 லட்சத்திற்கு வருடத்திற்கு 18% வட்டி கொடுப்பதாக ஒப்புக்கொண்டு வட்டி செலுத்தி வந்தேன் என்றால் சரியல்ல. இரண்டு வருடம் வட்டி கொடுக்காததால் அதனையும் சேர்த்தது ரூ. 11 லட்சத்திற்கு வா.சா.ஆ.1 கடன் பத்திரத்திதை எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ல் உள்ள ஷர்மிளா என்கிற சாட்சி கையெழுத்து என் மனைவியின் பெயர் தான் அந்த கையெழுத்தை அவர் போடவில்லை.

(இந்நிலையில் வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)